(ஈ) நாகர்கோவில் கலெக்டர் அலுவலகத்திற்குமுன் நீக்கப்பட்ட தேனீ களப்பணியாளர் உண்ணு நோன்பு

THIRU R. PONNAPPA NADAR: Mr. Speaker, Sir, I wish to call the attention of the Hon. Minister for Local Administration to a matter of urgent public importance, namely, the hunger strike on 31st August 1970 at 10 a.m. before the Collectorate at Nagercoil by the retrenched Bee Fieldmen who were proposed to be appointed in the panchayats and panchayat Unions and such of those persons who are in possession of conductors licences and badges to be absorbed in the State Transport Department pursuant to Government Memo. No. 39503/E-67-68, Rural Development and Local Administration Department, dated 4th August 1969.

*மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் சிலவற்றில், தேனீ வளர்ப்பு நிறுவனங்கள் மூடப்பட்டதால், தேனீ களப்பணியாளர் பலர் வேலை நீக்கத்துக்குள்ளாயினர். வேலை வாய்ப்பிழந்த தேனீ களப்பணியாளர்களில் பள்ளியிறுதியாண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களை எழுத்தர்களாகவும், தேர்ச்சி பெருதவர்களை இளநிலை எழுத்தாளர்களாகவும் மாற்று வேலை கொடுத்து நியமிக்க அரசு உத்தரவிட்டது. அரசினர் அளித்த இச்சலுகையை எல்லாப் பஞ்சாயத்து ஒன்றியங்களின் ஆணையர்கள், தேனீ களப்பாணியாளர்கள் கவனத்திற்கு கொண்டுவா கிராம வளர்ச்சி இயக்குநர் கோரப்பட்டார்.

கிராம வளர்ச்சி இயக்குநர் சில தேனீ களப்பாணியாளர்கள் நடத்துநர் லைசென்சும், சின்னமும் வைத்திருப்பதால் அவர்களை அரசினர் போக்கு வரத்துத் துறையில் நடத்துநர் வேலை கொடுக்கவேண்டுமென்று பரிந்துரைத்தார். அதன் பேரில் அரசு வேலை இழந்த தேனீ களப்பாணியார் களில் நடத்துநர் லைசென்சும், சின்னமும் உடையவர்களை வேலை தேடித்தரும் நிறுவனங்களில் பதிவு செய்து கொள்வதில், அவர்களுக்கு 3-வது இடம் கொடுக்கவும் அரசு உத்தரவிட்டது. கிராம வளர்ச்சி இயக்குநரும் இச்சலுகையை தேனீ களப்பாணியாளர்கள், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள், கவனத்திற்குக் கொண்டுவர கோரப்பட்டிருக்கிருர்.

அரசினரின் தொழில் உதவிச் சட்டத்தின் கீழ் தேனீ வளர்ப்புத் திட்டத்துக்கு ரூ. 2,000 வரை கடன் வழங்கப்படுகிறது. வேலை வாய்ப்பிழந்த தேனீ களப்பணியாளர் இந்த வாய்ப்பை பயன் படுத்திக்கொண்டு, தனியாக தேனீ விற்பனையாளர்களாகவும் என்றும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வோரின் விண்ணப்பங்களுக்கு, முதலிடம் கொடுக்கப்படவேண்டும் என்றும், தொழில் வணிக இயக்குநருக்கு உத்திரவுகள் அனுப்பப்பட்டுள்ளன. அரசினரின் இச்சலுகைகளை, வேலையிழந்த தேனீ களப்பணியாளர், ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையர்கள் ஆகியோரது கவனத்துக்கு கொண்டு வரவேண்டும் என்றும் கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் கோரப் பட்டிருக்கிருர்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த உண்ணு நோன்பு கைக்கொண்டவர்களை கைது செய்திருக்கிருர்கள் போலீஸார். அதன் மீது ஏதாவது தகவல்

வந்து, அதற்கு ஏதாவது நடவடிக்கை இந்த இலாகாவிலிருந்து எடுக்கப் பட்டிருக்கிறதா? அப்படியிருந்தால் அதைப்பற்றி விவரம் கூற முடியுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துச்சாமி: இது பற்றிய தகவல் எதுவும் இப்பொழுது இல்லை.

(உ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நில அடைமான வங்கிகள் விவசாயிகளுக்கு கடன் தொகைகள் அளிக்காததும் அரசு எடுத்துள்ள நடவடிக்கையும்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள நில அடைமான வங்கிகளில் நிதிப் பற்றுக்குறையின் காரணமாக விவசாயிகளால் கோரப்பட்ட கடன்கள் முறைப்படி அனுமதிக்கப்பட்டும், கடன் தொகை அளிக்கப்படாத நிலையில் சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை பற்றிய அவசரப் பொது முக்கிய மான காரியத்தை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*** மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** தலைவர் அவர்களே, இந்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து கடன்கள் வழங்குவதற்கு தமிழ்நாட்டி லிருக்கிற கூட்டுறவு மாநில நிலவள வங்கியிடம் நிதி வசதியின்மை ஒரு போதும் தடையாக இருந்ததில்லை. உண்மையில், கடன் வழங்கத் தன்னிடம் நிதி உபரியாக இருப்பதாகவே அவ்வப்பொழுது அம்மாநில வங்கி அறிவித்துள்ளது. இந்த மாநில வங்கி இந்த வருடம் ஏப்ரல் முதல் ஜூலை வரையில் ரூ. 3 கோடி 70 லட்சம் கடன் வழங்கியுள்ளது. இதில் 17 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நிலவள வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நிதி பற்றுக்குறை காரணமாக நிலவள வங்கி கடன் வழங்குவதை நிறுத்தியுள்ளது என்று இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வங்கிகள் உட்பட, எந்த வங்கியிடமிருந்தும் எவ்விதமான முறையீடும் கிடைக்கவில்லை. மாருக, மாநில வங்கியிடமுள்ள ரூ. 3.5 கோடி ரொக்க வசதி பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. அதோடு ரூ. 4.49 கோடி வரை நிதி வசதியும் இந்த வங்கிக்குக் கிடைக்கும். ஆக மொத்தம் 8 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு கடன் உதவியாக விநியோகம் செய்து கொண்டிருப்பதால், நடைமுறை விதிகளைத் தளர்த்த வேண்டும் என்றும். கிராமப் புறங்களில் நில வள வங்கிகளைப் பெருக்கவும் சிறிய சிறிய விவசாயி களுக்கு கடன் உதவி கொடுக்கவும், நீர்ப்பாசன கூட்டுறவு சங்கங்கள் அமைக்கவும் அரசினர் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிருர்கள்.

திரு. ஏ. அ. சுப்பையா: தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் மாநில நிலவள வங்கியிடம் பணம் செலவழிக்க முடியாத நிலை என்று சொன்ஞர்கள். எனக்குத் தெரிந்த வரையில், டி.டி.ஸி.-யில் கூட இந்தப் பிரச்சினை விவாதிக்கப்பட்டது, அவர்களுக்கு ரிசர்வ் பாங்கியிலிருந்து பணம் வரவில்லை என்று தான் நிலைமைகள் இருக்கின்றன. இப்பொழுது கொடுத்த தகவல்படி ஒரு வருஷம் குறைந்ததால் இப்பொழுது அதிகப்பட்டிருக்கிறது என்பதற்கு மகிழ்ச்சி.